**தகவல் சேமிப்பு ஆவணம் :**

1. ஒரு இணையதள மையம் குறைந்தபட்சம் ஒரு வருட காலத்திற்கான மின்மயமான அல்லது மனித முயிற்சியால் தகவல் சேமிப்பு ஆவணத்தை பராமரிக்கும்.
2. தகவல் சேமிப்பு ஆவணம் பின்வரும் விவரங்களை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.
   (i) பெயர்
   (ii) முகவரி
   (iii) பாலினம்
   (iv) தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்
   (v) அடையாள ஆவணத்தின் வகை மற்றும் விபரம்
   (vi) தேதி
   (vii) கணிணி திருப்புமுனை அடையாளம்
   (viii) பணி நேரம்
   (vii) பணி ஓய்வு நேரம்
2. அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்குள் இணைய பதிவு முகமையால் நிர்ணயிக்கப்பட்ட நபர் அல்லது முகவரிடம் ஒரு இணையதளம் அதன் தகவல் சேமிப்பு ஆவணத்தின் வன்பொருள் அல்லது மென்பொருள் பிரதியை சமர்பிக்க வேண்டும். (சம்பந்தப்பட்ட அரசால் முகவர் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

**அடையாள ஆவணம் :**

1. ஒரு இணையதள மையம் உபயோகிப்பவர்களிடம் எந்த ஒரு கணினியையும் பயன்படுத்துவதற்கு முன்பு பின்வரும் ஏதேனும் ஒரு ஆவணத்தைக் காண்பிக்குமாறு கேட்கக்கூடும்.
   (a) பள்ளி அல்லது கல்லூரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது
   (b) வங்கி அல்லது அஞ்சலகத்தால் வழங்கப்பட்ட புகைப்படக் கடன் அட்டை அல்லது பற்ற அட்டை அல்லது
   (c) கடவுச்சீட்டு அல்லது
   (d) வாக்காளர் அடையாள அட்டை அல்லது
   (e) வருமான வரி அதிகாரியால் வழங்கப்பட்ட நிரந்தர கணக்கு எண் (PAN) அல்லது
   (f) வேலை வழங்குபவர் அல்லது ஏதேனும் அரசு முகவாண்மையால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை அல்லது
   (g) சம்பந்த அரசால் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் அல்லது
   (h) இந்தியாவின் தனிப்பட்ட அடையாளங்களைக் குறிப்பிடும் அதிகாரம் (UIDAI) ஆல், வேறுபட்ட அடையாள எண் (UID)
2. சைபர் கஃபே, இந்த ஆவணங்களின் மின்பதிவு செய்யப்பட்ட பிரதி அல்லது ஆவணத்தின் நகலை சேமித்து வைக்கலாம்
3. சைபர் கஃபே, சிறப்புப் புகைப்படக் கருவியை பயன்படுத்தி உபயோகிப்பாளர் புகைப்படத்தை எடுத்து. அதை சைபர் கஃபே, மின்மயமான அல்லது மனித முயற்சி பிரதி வடிவத்தில் ஒரு அங்கமாக்க உரிமையுள்ளது.

**இணைய தளம் அணுகல் :**

1. ஒரு சைபர் கஃபே, சைபர் கஃபேவை பயன்படுத்தி அணுகப்பட்ட வெப்சைட்டுக்களின் மின்திரைகளிலுள்ள வரலாற்று பின்னணியினை சேமித்து பராமரிக்க வேண்டும்.
2. குழந்தைகள், பாலின இலக்கியத்தை உள்ளடக்கிய பாலியல் இன்பத்தை தூண்டும் படம் அல்லது ஆபாச வெளியீடுகள் தொடர்பான இணைய தளங்களை அணுகுவதை போதியளவு தடுக்கும் விதத்தில் சந்தைகளில் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு அல்லது பிரித்தெடுக்கும் மென்பொருட்களை சைபர் கஃபேவின் அனைத்து கணினிகளும் கொண்டிருக்க வேண்டும்.

**செயல்வடிவமைப்பு மற்றும் கணினி வளத்தின் மேலாண்மை**

1. தடுப்புக்கள் மற்றும் முப்பரிமாணங்களைத் தவிர அனைத்து கணினிகளின் திரைகளும், வெளிப்புறம் நோக்கியிருக்க வேண்டும். அதாவது அவைகள் சைபர் கஃபேவின் பொதுவான திறந்த இடத்தை நோக்கியிருக்க வேண்டும்.
2. கணினி அமைப்புக்களில் உள்ள நேரக் கடிகாரங்களும் மற்றும் சைபர் கஃபேவில் அமைக்கப்பட்டுள்ள பணிக்கருவிகள், இந்திய நிலைப்படுத்தப்பட்ட நேரத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டிருக்க வேண்டும்.
3. கணினி சிஸ்டத்தின் அமைப்புகளில் உபயோகிப்பவர்கள் ஏதேனும் மாற்றங்களை செய்வதை அனுமதிக்காத விதத்தில் போதிய அளவு பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டும்.
4. சைபர் கஃபேக்கள் தகவல் சேமிப்பு ஆவணத்தில் உள்ள விபரங்களை மாற்றவோ அல்லது தவறான முறையில் பயன்படுத்துவதை தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு : http://www.mit.gov.in/sites/upload files/dit/files/GSR315e 10511(1)pdf என்ற இணையதளத்தை பார்வையிடவும்

# அறிவிப்பு

புதுடெல்லி, 11 ஏப்ரல், 2011

G.S.R. 315 (E) தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000 (2000 இல் 21), இன் பிரிவு 79-இன் உட்பிரிவு (2) இன் கீழ் உடன் சேர்ந்து பிரிவு 87 - இன் உட்பிரிவு (2) இன் கூறு (zg) ஆல் அமல் படுத்தப்பட்ட அதிகாரங்களின்படி, மத்திய அரசு இதன் மூலம் பின்வரும் விதிமுறைகளை அழைக்கிறது. அவைகள் :

1. **சிறு தலைப்பு மற்றும் தொடக்கம் :**

1. இந்த விதிமுறைகள் தகவல் தொழில் நுட்ப (சைபர் கஃபேக்களுக்காக வழிகாட்டுதல்கள்) விதிமுறைகள் 2011 என்று அழைக்கப்படுகின்றன.

2. அதிகாரப்பூர்வமான அரசின் தகவல் சுற்று வெளியீட்டின் தேதியில் இருந்து அவைகள் நடைமுறைக்கு வரும் :-

2. **வரையறை :** (1) இந்த விதிமுறைகளில், கட்டத்திற்கு தேவைப்படும் பட்சத்தில் மட்டுமே :

(a) "சட்டம்" என்பது தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000 (200 இல் 21) :

(b) "பொருத்தமான அரசு" என்புது மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது மைய அரசின் எல்லைக்குட்பட்ட அரசாங்கம்

(c) "சைபர் கஃபே" என்பது சட்டத்தின் பிரிவு 2 - இன் உட்பிரிவு (1) இன் கூறு (na) இன் கீழ் வரையறுக்கப்பட்ட சைபர் கஃபே

(d) "கணினி வளம்" என்பது சட்டத்தின் பிரிவு - 2 - இன் உட்பிரிவு (1) இன் கூறு (k) இன் கீழ் வரையறுக்கப்பட்ட கணினி வளமாகும்

(e) "தரவு" என்பது சட்டத்தின் பிரிவு - 2 - இன் உட்பிரிவு (1) இன் கூறு (o) இன் கீழ் வரையறுக்கப்பட்ட தரவுவாகும்

(f) "தகவல்" என்பது சட்டத்தின் பிரிவு - 2 - இன் உட்பிரிவு (1) இன் கூறு (v) இன் கீழ் வரையறுக்கப்பட்டதகவலாகும்.

(g) "இடையீட்டாளார்" என்பது சட்டத்தின் பிரிவு - 2 - இன் உட்பிரிவு (1) இன் கூறு (w) இன் கீழ் வரையறுக்கப்பட்ட சட்டமாகும்.

(h) "பதிவு முகமை அலுவலகம்" என்பது சைபர் கஃபேக்களை அவைகளின் இயக்கத்திற்காக பதிவு செய்ய, பொருத்தமான அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அமைப்பு

(i) "தகவல் பதிவு ஆவணம்" என்பது சைபர் கஃபேவின் அணுகுதல் மற்றும் கணினி வளங்களை பயன்படுத்துதலைக் குறிப்பதற்காக பராமரிக்கப்படும் ஆவணம் ஆகும்

1. **"உபயோகிப்பவர்"** என்பது கணிணி வளத்தை அணுகும் அல்லது பயன்படுத்தும் நபர் மற்றும் இதர நபர்கள் ஒன்றாக சேர்ந்து சைபர் கஃபேவின் கணிணி வளங்களை அணுகம் அல்லது பயன்படுத்தப் பங்கேற்பவர்கள்.

2. இதர உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் மற்றம் சட்டத்தில் வரையறுக்கப்பட்டு ஆனால் இந்த விதிமுறைகளில் வரையறுக்கபடாதவைகள். சட்டத்தில் அவைகளுக்கு குறிக்கப்பட்ட விளக்கங்களே பொருந்தும்.

3. **சைபர் கஃபேவை பதிவு செய்வதற்கான முகமை :**

(1) அனைத்து சைபர் கஃபேக்களும், இதன் தொடர்பாக பொருத்தமான அரசாங்கத்தால் நியமிக்கப்படும் பதிவு முகமை என்றழைக்கப்படும் முகமையுடன் வேறுபட்ட பதிவு எண்ணுடன் புதிவு செய்யப்படும். பதிவிற்காக பல்வேறு வரையறைகள் பின்வருபவற்றை உள்ளடக்கியது.

(i) ஸ்தாபனத்தின் பெயர்

(ii) முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள், மின்அஞ்சல் முகவரியையும் சேர்த்து

(iii) தனி நபரா அல்லது கூட்டாளி அல்லது தனி உரிமைத்துவம் அல்லது சமுதாயம் அல்லது நிறுவனம்

(iv) துவங்கப்பட்ட நாள்,

(v) உரிமையாளர் / கூட்டாளி / சொந்தக்காரர் / இயக்குனர்

(vi) பதிவு செய்யப்பட்டதா அல்லது இல்லையா (ஆமாம் எனில், ரெஜிஸ்ட்ரார் ஆஃப் நிறுவனங்கள் அல்லது நிறுவனங்களின் பதிவாளர் அல்லது குழுவினர் உடனான பதிவுக்கான பிரதி) மற்றும்

(vii) மற்றும் சைபர் கஃபேயில் இருந்து வழங்கப்படும் சேவைகளின் வகை

சைபர் கஃபேவின் பதிவைத் தொடர்ந்து ரெஜிஸ்ட்ரேஷன் ஏஜென்சியில் இருந்து ஒரு அலுவலா் தனிப்பட்ட முறையில் வருகை தருவார்.

2. ரெஜிஸ்ட்ரேஷன் ஏஜென்சியின் இணையதளத்தில்/ சைபர் கஃபேபின் பதிவுக்கான விபரங்கள் வெளியிடப்படும்.

3. பொருத்தமான அரசு, சைபர் கஃபேக்கள் நேரடிப் பதிவு செய்ய, ஆன்லைன் பதிவு வசதியை அமைப்பதற்கானசெய்முறையை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இது மத்திய அரசின் கீழ் தனியாக குறிப்பிடப்படும்.

4. **உபயோகிப்பவர்க்கான அடையாளம் :**

(1) சைபர் கஃபே உபயோகிப்பவரின் அடையாளத்தை நிலைநாட்டாமல் எந்தப் பயனரையும் அதன் கணிணி வளங்களைப் பயன்படுத்த அனுமதிக்க கூடாது. உத்தேசிக்க கூடிய உபயோகிப்பவர் தனது அடையாளத்தை நிலை நாட்ட, சைபர் கஃபேவின் திருப்திக்கு ஏற்ப உபயோகிப்பவர்களை கண்டறிய ஆவணத்தை வழங்க வேண்டும்.

(i) பள்ளி அல்லது கல்லூரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது

(ii) வங்கி அல்லது அஞ்சலகத்தால் வழங்கப்பட்ட புகைப்படக் கடன் அட்டை அல்லது பற்ற அட்டை அல்லது

(iii) கடவுச்சீட்டு அல்லது

(iv) வாக்காளர் அடையாள அட்டை அல்லது

(v) வருமான வரி அதிகாரியால் வழங்கப்பட்ட நிரந்தர கணக்கு எண் (PAN) அல்லது

(vi) வேலை வழங்குபவர் அல்லது ஏதேனும் அரசு முகவாண்மையால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை அல்லது

(vii) சம்பந்த அரசால் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் அல்லது

(viii) இந்தியாவின் யூனிக் ஐடெண்டிஃபிகேஷன் அத்தாரிட்டி (UIDAI) ஆல், வேறுபட்ட அடையாள எண் (UID)

2. உபயோகிப்பவரின் கையொப்பத்துடன் மற்றம் சைபர் கஃபேவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியின் கையொப்பத்துடன், உபயோகிப்பாளர் அடையாள ஆவணத்தை, நகலாகவோ அல்லது ஸ்கேன்டு பிரதியாகவோ சைபர் கஃபே சேமித்து வைக்க வேண்டும். அத்தகைய ஆவணங்கள் கட்டாயம் குறைந்த பட்சம் ஒரு வருட காலத்திற்கு பேணப்பட வேண்டும்.

3. உப-விதி (1) இன் கீழ் நிலைநாட்டப்பட்ட உபயோகிப்பவரின் அடையாளத்துடன் சேர்த்து உபயோகிப்பவரின் அடையாளத்தை நிலைநிறுத்த, சைபர் கஃபேவின் கணினிகளில் ஏதேனும் ஒன்றில்/ உள்ள வெப் கேமிராவைப் பயன்படுத்தி, அவர் சைபர் கஃபேவால் புகைப்படம் எடுக்கப்படுவார். அத்தகைய வெப் கேமிரா புகைப்படங்கள், உபயோகிப்பாளர் மற்றும் சைபர் கஃபேவின் அங்கிகரிக்கப்பட்ட பிரதிநிதியால் கையொப்பமிட்டு மனித முயற்சி அல்லது மின்னணுப் படிவத்தில் பராமரிக்கப்படும் லாக் ரெஜிஸ்டரில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும்.

4. புகைப்பட அடையாள அட்டை இல்லாத 18 வயதுக்குட்பட்டவர்கள் உப-விதி (1) இன் கீழ் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு ஆவணத்துடன் ஒரு மூத்தோருடன் வரவேண்டும்.

5. உபயோகிப்பவருடன் வரும் நபர் உப-விதி (1) இன் கீழ், பட்டியலிடப்பட்ட ஆவணத்தை சமர்பித்து அவரது அடையாளத்தை உறுதி செய்த பிறகு மற்றும் உப-விதி (2) இன்படி அவைகளைப் பதிவு செய்த பிறகு தான் சைபர் கஃபேவிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்.

6. ஏதேனும் உபயோகிப்பாளர் தொடர்பாக சந்தேகம் இருந்தாலோ அல்லது அவர் சந்தேகப்படும் விதத்தில் நடந்து கொண்டாலொ உடனடியாக சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு உடனடியாக சைபர் கஃபே தெரியப்படுத்த வேண்டும்.

(5) **லாக் ரெஜிஸ்டர் :**

1. உபயோகிப்பவர் மற்றும் அவருடன் வரும் நபரின் அடையாளத்தை விதி 4, உப-விதி (1) இன் கீழ் உறுதி செய்த பிறகு சைபர் கஃபே அத்தகைய உபயோகிப்பவர் மற்றும் உடன் வரும் நபர்கள் யாரேனும் இருந்தால் அவர்களின் தேவையான விபரங்களைப் பதிவு செய்து குறைந்த பட்சம் ஒரு வருட காலத்திற்கு லாக் ரெஜிஸ்டரைப் பராமரிக்க வேண்டும்.

2. சைபர் கஃபே, லாக் ரெஜிஸ்டரின் ஆன்லைன் பிரதியையும் பராமரிக்க வேண்டும். அத்தகைய ரெஜீடரின் ஆன்லைன் பிரதிகள், எலெக்ட்ரானிக் அல்லது டிஜிட்டல் கையொப்பத்தைப் பயன்படுத்தி, உறுதி செய்யலாம். இந்த லாக் ரெஜிஸ்டர் குறைந்த பட்சம் உபயோகிப்பவரின் பின்வரும் விபரங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவைகள் :

(i) பெயர்

(ii) முகவரி

(iii) பாலினம்

(iv) தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்

(v) அடையாள ஆவணத்தின் வகை மற்றும் விபரம்

(vi) தேதி

(vii) கணிணி டெர்மினல் அடையாளம்

(viii) பணி நேரம்

(vii) பணியிலிருந்து எடுக்கும் நேரம்

(3) சைபர் கஃபே கணினி வளங்களின் பயன்பாட்டை குறித்து தேதி வாரியான விபரங்களை ரெஜிஸ்டரி காண்பித்து அதன் மாதந்திர அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும் மற்றும் அடுத்த மாதம் 5-ஆம் தேதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட நபர் அல்லது ஏஜென்சியிடம் ஹார்டு அல்லது சாப்ட் காபியை சமர்பிக்க வேண்டும்.

(4) ஒவ்வொரு அணுகுதலுக்கான லாக் பதிவுகள் அல்லது குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு அதன் கணினி வளங்களைப் பயன்படுத்திய ஏதேனும் உபயோகிப்பாளரின் லாக்-இன் ஆகியவைகளைச் சேமித்து பேக்அப்க்களைப் பராமரிக்க வேண்டியது சைபர் கஃபே உரிமையாளகளின் பொறுப்பாகும்.

(i) அனைத்து சைபர் கஃபேக்களிலும் கணினி வளத்தை உபயோகத்து அணுகப்பட்ட இணையதளங்களின் வரலாறு

(ii) சைபர் கஃபேவில் நிறுவப்பட்ட ப்ராக்சி சர்வரின் லாக்கள். லாக் தொடர்பான ஏதேனும் பிரச்சனைகளுக்கு, இந்தியன் கணினி பொறுப்புக் குழு (CERT-In) ஆல், உருவாக்கப்பட்டு அவ்வப்போது "சரிபார்ப்பு மற்றும் பதிவுகளுக்கான வழிக்காட்டுதல் CISG 2008-01" ஐ சைபர் கஃபே மேற்பார்வையிடலாம். இந்த ஆவணம் www.cert-in.org.in என்ற இணையதளத்தில் இருந்து கிடைக்கப் பெறலாம்.

(5) குறைந்தபட்சம் ஒரு வருட காலத்திற்கு, பாதுகாப்பான முறையில், லாக் ரெஜிஸ்டர் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்படகூடாது என்பதை சைபர் கஃபே உறுதி செய்ய வேண்டும்.

(6) **செயல் வடிவமைப்பு மற்றும் கணினி வளத்தின் மேலாண்மை :**

1. சைபர் கஃபேக்களின் முப்பரிமாண பிரிவினை ஏதேனும் கட்டப்பட்டிருந்தால் அல்லது அமைக்கப்பட்டிருந்தால் அவைகள் தரை மட்டத்திலிருந்து நாலறை அடிக்கு மேல் இருக்கக் கூடாது.

2. தடுப்புக்கள் மற்றும் க்யூபிக்களைத் தவிர அனைத்து கணினிகளின் திரைகளும், வெளிப்புறம் நோக்கியிருக்க வேண்டும். அதாவது அவைகள் சைபர் கஃபேவின் பொதுவான திறந்த இடத்தை நோக்கியிருக்க வேண்டும்.

3. க்யூபிக்கல் அல்லது பிரிவினைகளைக் கொண்டிருக்கும் சைபர் கஃபே, பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் உடன் வரும் பொழுது மட்டுமே, க்யூபிக்கல் அல்லது பிரிவினைகளில் உள்ள எந்த ஒரு கணினி வளத்தையும் 18 வயதிற்குட்பட்டவர்கள் பயன்படுத்துவதை அனுமதிக்கவேண்டும். அப்ப இல்லாவீட்டால் அனுமதி வழங்கக்கூடாது.

(4) கணினி சிஸ்டங்களில் உள்ள நேரக் கடிகாரங்களும் மற்றும் சைபர் கஃபேவில் அமைக்கப்பட்டுள்ள சர்வர்கள், இண்டியன் ஸ்டேண்டர்டு டைமுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(5). குழந்தைகள், பாலின இலக்கியத்தை உள்ளடக்கிய பாலியல் இன்பத்தை தூண்டும் படம் அல்லது ஆபாச வெளியீடுகள் தொடர்பான இணைய தளங்களை அணுகுவதை போதியளவு தடுக்கும் விதத்தில் சந்தைகளில் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு அல்லது பிரித்தெடுக்கும் மென்பொருட்களை சைபர் கஃபேவின் அனைத்து கணினிகளும் கொண்டிருக்க வேண்டும்.

(6). சைபர் கஃபேக்கள், அவர்களது கணினி வளம், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய போதிய அளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

7. சைபர் கஃபேக்கள், உபயோகிப்பவர்க்கு தெளிவாக புலப்படும் விதத்தில் சட்டத்திற்கு புறம்பான தகவல்களைப் பதிவிறக்கம் செய்வது அல்லது பிரதியெடுப்பது மேலும் பாலியல் இன்பத்தை தூண்டும் இணையதளங்களை பார்ப்பதை தவிர்க்க வேண்டி, எழுத்துப் பலகையை காட்சிக்கு வைக்க வேண்டும்.

8. கணினி சிஸ்டத்தின் அமைப்புகளில் உபயோகிப்பவர்கள் ஏதேனும் மாற்றங்களை செய்வதை அனுமதிக்காத விதத்தில் போதிய அளவு பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

9. சைபர் கஃபே பாதுகாப்பான முறையில் லாக் ரெஜிஸ்டர் மற்றும் உபயோகிப்பாளர் அடையாள விபரங்களை பேண வேண்டும்.

10. ஒரு வருட காலத்திற்கு சைபர் கஃபே அதன் ஊழியர்களின் விபரங்களையும் பராமரிக்க வேண்டும்.

11. சைபர் கஃபேக்கள் லாக் ரெஜிஸ்ட்ரில் உள்ள விபரங்களை மாற்றவோ அல்லது தவறான முறையில் பயன்படுத்துவதை தவிர்க்கப்பட வேண்டும்.

(7) **சைபர் கஃபேவுக்கான சோதனை**

1. ரெஜிஸ்ரேஷன் ஏஜென்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அலுவலர், சைபர் கஃபே மற்றும் நிலைநிறுத்தப்பட்ட கணினி வளங்களின் வலைத்தளங்களை, சோதனை அல்லது பரிசோதிக்க, எந்த நேரமும் விதிமுறைகளுடன் ஒத்துப் போகின்றனரா என்று பார்க்க முழுவுரிமை உள்ளது. சோதனை அலுவலரின் வேண்டுகோளுக்கு இணங்க அனைத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பதிவேடுகள் மற்றும் ஏதேனும் தேவைப்படும் தகவல்களை சைபர் கஃபே உரிமையாளர்கள் வழங்கவேண்டும்.

[F.No. 11(3)/2011-CLFE]

N. ரவி சங்கர், கூட்டு காரியதரிசி